செய்தி வெளியீடு எண்.7/2018 நாள்: 25.01.2018

## சென்னைக் குடிநீர் வாரியத்தில் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி ஏற்பு

சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் தேசிய வாக்காளர் தினத்தினை முன்னிட்டு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (25.01.2018) நடைபெற்றது.

இந்தியத் தேர்தல் ஆணையம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25ஆம் நாளினை தேசிய வாக்காளர் தினமாக கடைபிடித்து வருகிறது. தேர்தலில் மக்கள் நேர்மையாக வாக்களிக்க வேண்டும் என்பது குறித்த விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கத்தோடு இந்த உறுதி மொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

" **உறுதிமொழி** "

**நேர்மையாக வாக்களிக்க வாக்காளர்களின் உறுதிமொழி**

ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையுடைய இந்தியக் குடிமக்களாகிய நாம், நம் நாட்டின் ஜனநாயக மரபுகளையும், சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல் மாண்பையும் நிலைநிறுத்துவோம் என்றும், மேலும் ஒவ்வொரு தேர்தலிலும் அச்சமின்றியும், மதம், இனம், சாதி, வகுப்பு, மொழி அல்லது எந்தவொரு தூண்டுதலுக்கும் உட்படாமலும் நேர்மையாக சிந்தித்து வாக்களிப்போம் என்றும் உளமார உறுதி ஏற்கிறோம்.

மேற்கண்ட உறுதிமொழியினை சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள் வாசிக்க வாரியத்தின் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அதனைச் திரும்பச் சொல்ல உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர்.




மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்